**மோட்டார் வாகன விபத்து இழப்பீட்டுக் கோருரிமை தீர்ப்பாயம்**
சார்பு நீதிமன்றம், தேன்கனிக்கோட்டை
முன்னிலை: திரு.எஸ். விஜய் அழகிரி, பி.காம்., பி.எல்.,
சார்பு நீதிபதி, தேன்கனிக்கோட்டை
2026–ஆம் ஆண்டு ஏப்ரல் 02–ஆம் நாள் வியாழன்கிழமை
(திருவள்ளுவராண்டு 2057– விசுவாவசு வருடம் – பங்குனி திங்கள் 19 ம் நாள்)

**மோ.வா.வி.இ.அ.ம.எண். 25/2025**
**CNR No. TNKI160003602025**

வெங்கடேஷ் ... மனுதாரர்

/எதிராக/

1. பெருமாள்
2. கிளை மேலளார்
TATA AIG இன்சூரன்ஸ் கம்பெணி லிமிடெட்

...எதிர்மனுதாரார்கள்

இம்மனுவானது இந்நீதிமன்றத்தில் MCOP No. 25/2025 என 10.09.2025 கோப்புக்கு எடுக்கப்பட்டு, என் முன்பாக 12.03.2026 ம் தேதி அன்று இறுதியாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. R. கணேசன், B.A., LLB., அவர்கள் ஆஜராகியும், 1 வது எதிர்மனுதாரரை அழைத்தும் ஆஜராகததால் அவரைபொறுத்து ஒருதலைப்பட்சமாக உத்தரவிடப்பட்டும், 2 வது எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. M. ஜுவானந்தம் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களை கேட்டும் ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்:

**உத்தரவு**

மனுதாரர் தனக்கு சாலை விபத்தினால் ஏற்பட்ட காயத்திற்கு ரூ. 30,00,000/– இழப்பீடு கேட்டு மோட்டார் வாகன சட்டப்பிரிவு 166 ன் கீழ் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

**2. மனுவின் சுருக்கம் :**

| | |
|---|---|
| மனுதாரரின் பெயர், வயது, தொழில் மற்றும் வருமானம் | வெங்கடேஷ், த/பெ. தம்மையா, விவசாயம், மாதம் ரூ. 25,000/– |
| விபத்து சம்பவ இடம், நாள் மற்றும் நேரம் | கடந்த 09.08.2025 அன்று இரவு 09.30 மணியளவில் தேன்கனிக்கோட்டை – பஞ்சப்பள்ளி ரோடு, TVS ஷோ ரூம் எதிர்புறம் |
| குற்ற வழக்கு விபரம் | தேன்கனிக்கோட்டை PS, Cr. No, 299/2025 U/S. 281, 125 (a) BNSS |
| காயத்தின் விபரம் | மனுதாரருக்கு விபத்தினால்<br>Grievous injuries all over the body<br>போன்ற காயங்கள் ஏற்பட்டுள்ளதாக கூறியுள்ளார். |
| சிகிச்சை விபரங்கள் | மனுதாரர் விபத்திற்கு உட்பட்டவுடன் தேன்கனிக்கோட்டை மற்றும் கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனையிலும், பிறகு ஓசூர் குணம் மருத்துவமனையிலும் 10.08.2025 முதல் 14.08.2025 வரை உள்நோயாளியாக சிகிச்சை பெற்று வந்ததாகவும் குறிப்பிட்டுள்ளார். |
| சம்பவ விபரங்கள் | மனுதாரர் கடந்த 09.08.2025 அன்று வழக்கம்போல வேலைக்கு சென்றுவிட்டு வீட்டுக்கு TN 70 AT 6384 பதிவெண் கொண்ட இரு சக்கரவாகனத்தில் இரவு 09.30 மணியளவில் தேன்கனிக்கோட்டை – பஞ்சப்பள்ளி ரோடு, TVS ஷோ ரூம் எதிர்புறம் சென்று கொண்டிருந்தபோது எதிர்புறம் நின்று கொண்டிருந்த TN 34 AH 8656 என்ற பதிவெண் கொண்ட அசோர் லேலேண்ட் தோஸ்த் வாகனத்தின் |

| | |
|---|---|
| | மீது மோதி விபத்து ஏற்பட்டுள்ளது என்றும், மேற்படி விபத்திற்கு 1வது எதிர்மனுதாரரும், 2வது எதிர்மனுதாரரால் காப்பீடு செய்யப்பட்ட TN 34 AH 8656 என்ற பதிவெண் கொண்ட வாகன ஓட்டுநர் கவனக்குறைவாகவும், அலட்சியமாகவும், பார்க்கிங் லைட்டை போடாமல், சாலை விதிகளை பின்பற்றாமல் நிறுத்தியிருந்து விபத்தை ஏற்படுத்தியதாக கூறப்பட்டுள்ளது. |
| மனுதாரர் கோரியுள்ள இழப்பீடு தொகை | ரூ. 30,00,000/- |

3. 1வது எதிர்மனுதாரரை அழைத்தும் நீதிமன்றத்தால் ஆஜராகததால் அவரை பொறுத்து ஒருதலைப்பட்சமாக உத்தரவிடப்பட்டுள்ளது.

**<u>5. 2வது எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்</u>**

மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ள விபரங்கள் உண்மைக்கு புறம்பானது என்றும், இந்த எதிர்மனுதாரரால் எதிர்உரையில் ஒப்புக்கொண்ட சங்கதிகளை தவிர மற்ற சங்கதிகளை மனுதாரரே நிரூபிக்க வேண்டும் எனவும், மனுதாரரின் மனு சட்டப்படி நிலைக்கத்தக்கது அல்ல என்றும், மனுவில் குறிப்பிட்டுள்ளது போல் விபத்து நடைபெறவில்லை என்றும், மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ள சங்கதிகளை சாட்சியம் மற்றும் ஆவண ஆதாரங்கள் மூலம் நிரூபிக்க வேண்டும் என்றும், விபத்தானது TN 34 AH 8656 என்ற பதிவெண் கொண்ட வாகனத்தை சாலை விதிகளை பின்பற்றாமலும், பார்க்கிங் லைட் போடாமலும் நிறுத்தியிருந்து அதனால் விபத்து ஏற்பட்டுள்ளது என்று கூறுவது தவறு என்றும், மனுதாரரின் கவனக்குறைவினால் தான் விபத்து ஏற்பட்டது என்றும், இரவு நேரத்தில் மனுதாரர் கவனக்குறைவாகவும் சாலை விதிகளை பின்பற்றாமலும், நிறுத்தியிருந்த வாகனத்தின்மீது மோதி விபத்தினை மனுதாரர் தான் ஏற்படுத்தியிருக்கிறார் என்றும், விபத்திற்கு மனுதாரர் தான் காரணம் என்றும், எனவே இந்த எதிர்மனுதாரர், மனுதாரருக்கு எவ்வித இழப்பீடும் கொடுக்க

கடமைப்பட்டவர் அல்ல என்றும், மனுதாரரின் தொழில், வயது, வருமானம், காயத்தின் தன்மை மற்றும் சிகிச்சை விபரங்கள் ஆகியவற்றை மனுதாரரே நிரூபிக்க வேண்டும் மனுதாரர் பல்வேறு தரப்பின் கீழ் கோரியுள்ள இழப்பீடு அதிகமானது என்றும், எனவே, மனுதாரரின் மனுவை தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று குறிப்பிட்டு எதிர்மனுதாரர் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**5. இந்த வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டியவை.**

1. யாருடைய கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டுள்ளது ?
2. மனுதாரருக்கு இழப்பீடு கொடுக்க பொறுப்பானவர்கள் யார் ?
3. மனுதாரருக்கு கிடைக்ககூடிய இழப்பீடு தொகை எவ்வளவு ?

**6. பிரச்சனை – 1**

i) இருதரப்பிலும் கற்றறிந்த வழக்கறிஞர்கள் அவரவர்கள் வழக்குரையின் அடிப்படையிலும், ஆவணங்களின் அடிப்படையிலும் வாதிட்டார்கள். மனுதாரர் தரப்பில் மனுதாரர் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.14 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. 2வது எதிர்மனுதாரர் தரப்பில் பரமேஷ்வரன் எ.ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு சா.சா.ஆ.1 குறியீடு செய்யப்பட்டுள்ளது. மனுதாரரின் ஊனச்சான்று நீ.ம.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

ii) மனுதாரர் தனது மனு மற்றும் சாட்சியத்திலும் கடந்த 09.08.2025 அன்று வழக்கம்போல வேலைக்கு சென்றுவிட்டு வீட்டுக்கு TN 70 AT 6384 பதிவெண் கொண்ட இரு சக்கரவாகனத்தில் இரவு 09.30 மணியளவில் தேன்கனிக்கோட்டை – பஞ்சப்பள்ளி ரோடு, TVS ஷோ ரூம் எதிர்புறம் சென்று கொண்டிருந்தபோது எதிர்புறம் சாலை விதிகளை பின்பற்றாமலும் பார்க்கிங் லைட் போடாமலும், கவனக்குறைவாகவும், அஜாக்கிரதையாகவும் நிறுத்தியிருந்த TN 34 AH 8656 என்ற பதிவெண் கொண்ட அசோர் லேலேண்ட் தோஸ்த் வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

iii) விபத்து நடந்தவுடன் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை ம.சா.ஆ. 1 ல் 1வது எதிர்மனுதாரரின் TN 34 AH 8656 என்ற பதிவெண் கொண்ட வாகன ஓட்டுநர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

iv) கற்றறிந்த 2வது எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில் விபத்தானது 1வது எதிர்மனுதாரரின் TN 34 AH 8656 என்ற பதிவெண் கொண்ட வாகன ஓட்டுநரின் கவனக்குறைவால் ஏற்படவில்லை என்றும், மனுதாரர் தான் அவர் வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து 1வது எதிர்மனுதாரர் வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்திவிட்டார் என்றும், 1வது எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநருக்கு சரக்கு வாகனங்கள் ஓட்டுவதற்கு பேட்ச் இல்லை என்று வாதிடப்பட்டிருக்கிறது.

v) மனுதாரர் தரப்பில் அதனை மறுத்து விபத்தானது TN 34 AH 8656 என்ற பதிவெண் கொண்ட வாகன ஓட்டுநரின் கவனக்குறைவால் நிறுத்தியிருந்ததால் தான் விபத்து ஏற்பட்டது என்றும், விபத்து சமயம் TN 34 AH 8656 என்ற பதிவெண் கொண்ட வாகனமானது 2ம் எதிர்மனுதாரரின் நிறுவனத்தின் காப்பீடு செய்யப்பட்டிருப்பதால் 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு தொகை கொடுக்கப்பட்டவர் என்று வாதம் முன்வைக்கப்பட்டுள்ளது.

vi) 1வது எதிர்மனுதாரரின் TN 34 AH 8656 என்ற பதிவெண் கொண்ட வாகன ஓட்டுநரால் விபத்து ஏற்படவில்லை என்று 2வது எதிர்மனுதாரர் தரப்பில் கூறினாலும், ம.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கையில் TN 34 AH 8656 என்ற பதிவெண் கொண்ட வாகன ஓட்டுநரின் கவனக்குறைவும் அஜாக்கிரதையும் பார்க்கிங் லைட் போடாமல் இருந்ததே விபத்திற்கான காரணமாக விபத்து வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதை வைத்து பார்க்கும்போதும் விபத்தானது 1வது எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநரால் நடைபெறவில்லை என்பதற்கு அந்த ஓட்டுநரை 2வது எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சியாக விசாரித்து 1வது எதிர்மனுதாரர் ஓட்டுநரால் விபத்து நடைபெறவில்லை என்று 2வது எதிர்மனுதாரர் தரப்பில் நிரூபிக்கப்படவில்லை. மேலும், 1வது எதிர்மனுதாரர் வாகனம் இரவு நேரத்தில் நின்று கொண்டிருந்தபோது பார்க்கிங்க லைட் போடப்பட்டிருந்ததாக 2வது எதிர்மனுதாரர் தரப்பில் நிருபிக்கப்படவில்லை. ம.த.சா.ஆ.1

முதல் தகவல் அறிக்கையின்படியும் 2 வது எதிர்மனுதாரர் தரப்பில் 1 வது எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநரை விசாரித்து விபத்திற்கு 1 வது எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநர் காரணம் இல்லை என்பதை நிரூபிக்காததால் TN 34 AH 8656 என்ற பதிவெண் கொண்ட வாகன ஓட்டுநர் தான் இவ்வழக்கு விபத்திற்கு காரணம் என்று இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.

2 வது எதிர்மனுதாரர் தரப்பில் 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநருக்கு பேட்ச் இல்லை என்ற ஒரு வாதம் முன்வைக்கப்பட்டிருக்கிறது. மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ம.த.சா.ஆ,13 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை ஆகும். அதில் அந்த வாகன ஓட்டுநருக்கு பேட்ச் இருப்பதாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. எனவே, 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநருக்கு பேட்ச் இல்லை என்ற 2ம் எதிர்மனுதாரர் வாதம் நிராகரிக்கப்படுகிறது.

மனுதாரரை 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யும் போது தனக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்ற கேள்விக்கு மனுதாரர் தனது சாட்சியத்தில் ஓட்டுநர் உரிமம் விபத்தின்போது தொலைந்துவிட்டது என்றும், தான் ஓசூர் RTO அலுவலகத்தில் ஓட்டுநர் உரிமம் பெற்றதாகவும், தன்னால் ஓசூர் RTO அலுவலகத்தில் இருந்து ஓட்டுநர் உரிமம் தாக்கல் செய்ய முடியும் என்று சாட்சியம் அளித்திருக்கிறார். ஆனால், மனுதாரர் தரப்பில் மனுதாரருக்கு உண்டான ஓட்டுநர் உரிமம் தாக்கல் செய்யப்படவில்லை. 2 வது எதிர்மனுதாரர் தரப்பில் விசாரிக்கப்பட்ட எ.சா.1 ஓசூர் RTO அலுவலக இளநிலை உதவியாளர் மனுதாரருக்கு தங்களது அலுவலகத்தில் ஓட்டுநர் உரிமம் வழங்கப்படவில்லை என்று சாட்சியம் அளித்திருக்கிறார். மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ம.த.சா.ஆ.14 மனுதாரர் வாகனத்தின் உடைய மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை ஆகும். அதில் மனுதாரருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்று CR Issue செய்யப்பட்டிருக்கிறது. ஆக, விபத்தின்போது மனுதாரருக்கு ஓட்டுநர் உரிமம் இருந்தது என்பது மனுதாரர் தரப்பில் நிரூபிக்கப்படவில்லை. மனுதாரர் ஓட்டுநர் உரிமம் இல்லாமல் இருசக்கர வாகனத்தை ஓட்டி சென்றிருப்பது அஜாக்கிரதையாக மனுதாரர் இருசசக்கர வாகனத்தை ஓட்டியிருப்பதால் மனுதாரருக்கு கிடைக்கக்கூடிய

மொத்த இழப்பீடு தொகையில் 10 சதவீதத்தை மனுதாரரே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.

**7. பிரச்சனை 2**

i) விபத்து சமயத்தில் TN 34 AH 8656 என்ற பதிவெண் கொண்ட வாகனமானது 2ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டு இருந்ததாக மனுவில் கூறப்பட்டுள்ளது. ம.சா.ஆ. 8 காப்பீடு பாலிஸி நகலைப் பரிசீலனை செய்து பார்க்கும்போது 06.11.2024 முதல் 05.11.2025 வரை காப்பீடு பாலிஸி உள்ளது. விபத்தானது 09.08.2025 தேதியில் நடைபெற்றுள்ளது. எனவே, விபத்து சமயத்தில் காப்பீடு உள்ளது தெரியவருகிறது. எனவே விபத்து தேதியான 09.08.2025ம் தேதியன்று 1ம் எதிர்மனுதாரரின் வாகனத்திற்கு காப்பீடு செயலில் உள்ளது தெரியவருகிறது. ம.சா.ஆ.8 ன் படி 1ம் எதிர்மனுதாரர் வாகனமான TN 34 AH 8656 என்ற பதிவெண் கொண்ட வாகனத்திற்கு விபத்து சமயத்தில் 2வது எதிர்மனுதாரரின் நிறுவனத்தில் காப்பீடு செய்து காப்பீடு பாலிஸி உள்ளதால் 2ம் எதிர்மனுதாரர் தான் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் என்று இந்த தீர்ப்பாயம் முடிவுக்கு வருகிறது.

**8. பிரச்சனை – 3**

**i)** இந்த விபத்து சமயத்தில் மனுதாரர் வெங்கடேஷ், த/பெ. திம்மையா, விவசாயம், மாதம் ரூ. 25,000/– சம்பாதித்து வந்ததாகக் குறிப்பிட்டுள்ளார் என்றும், இந்த விபத்தின் காரணமாக முன்பு போல் மனுதாரரால் வேலை செய்ய இயலாததால் வருமான இழப்பாக ரூ.10,00,000/– ஏற்பட்டதாக கோரியுள்ளார். ஆனால், மனுதாரர் மாதம் ரூ.25,000/– வருமானம் ஈட்டி வந்ததற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. இருந்தபோதிலும் மனுதாரர் அவரது குடும்பத்தை பராமரித்து வந்தவர் என்ற அடிப்படையில் மனுதாரர் மாதம் ரூ.15,000/– சம்பாதிக்க வாய்ப்புள்ளதாக கருதி மனுதாரரின் மாத வருமானம் ரூ.15,000/– என நிர்ணயம் செய்யப்படுகிறது. மனுதாரர் அவரது குடும்பத்தை பராமரித்து வந்தவர் என்ற அடிப்படையில் மனுதாரருக்கு ஏற்பட்ட காயங்களினால் மனுதாரர் குறைந்தபட்சம் 5 மாதங்கள் வேலை செய்யாத நிலை

ஏற்பட்டிருக்கும். எனவே, 5 மாத வருமான இழப்பிற்கு 5 X 15,000 = ரூ.75,000/- மனுதாரருக்கு வருமான இழப்பின்கீழ் கிடைக்கத்தக்கது என்று இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.

ii) மனுதாரரின் ஊனம் பற்றி கணிப்பதற்காக மருத்துவக் குழு முன்பு ஆஜரானபோது 35 சதவீதம் ஊனம் எனக் குறிப்பிட்டு ஊனச்சான்று வழங்கப்பட்டுள்ளது. மனுதாரருக்கு மருத்துவகுழுமத்தால் வழங்கப்பட்ட நீ.ம.சா.ஆ.1 ஊனச்சான்றை நீதிமன்றம் கருத்தில் எடுத்துக்கொள்கிறது. மனுதாரருக்கு ஏற்பட்டுள்ள ஊனத்தின் அடிப்படையில் Noori Vs Narendran and New India Assurance Co. Ltd. 2025 (1) TN MAC 447 என்ற முன்தீர்ப்பின்படி 2025ம் ஆண்டில் விபத்தில் ஏற்பட்டுள்ள ஊனத்திற்கு 1 சதவீதத்திற்கு ரூ.9000/- என மாண்புமிகு. சென்னை உயர்நீதிமன்றத்தால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இந்த மனுதாரருக்கு 2025ம் ஆண்டில் ஏற்பட்ட ஊனத்திற்கு 1 சதவீதத்திற்கு ரூ.10,000/- என எடுத்துக்கொண்டு 35 சதவீதத்திற்கு 10,000 X 35 = ரூ. 3,50,000/- என இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.

iii) மனுதாரர் ஓசூர் குணம் மருத்துவமனையில் ரூ.2,09,078/- செலவு செய்ததாக ம.சா.ஆ.10 ஆவணத்தை தாக்கல் செய்துள்ளார். ம.சா.ஆ. 10 ஆவணத்தை 2வது எதிர்மனுதாரர் தரப்பில் மறுத்திருந்தாலும் அது பொய்யானது என நிரூபிக்க ஓசூர் குணம் மருத்துவமனை நிர்வாகத்தினரை அழைத்து அது தங்களால் வழங்கப்படவில்லை என எதுவும் 2வது எதிர்மனுதாரர் தரப்பில் நிரூபிக்கப்படவில்லை. ம.த.சா.ஆ.10 ஐ பார்வையிடுகையில் அதில் மொத்தம் மனுதாரர் செய்த செலவுத்தொகை ரூ.2,09,078/-ஆகும். மனுதாரருக்கு மருத்துவ செலவாக ரூ. 2,09,078/- கிடைக்கத்தக்கது என்று இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.

iv) மனுதாரருக்கு ஏற்பட்ட வலி மற்றும் வேதனைக்காக ரூ. 3,00,000/- இழப்பிடாக கோரியுள்ளார். அவருக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மை, இயலாமை ஆகியவற்றை கருத்தில் கொண்டு ரூ.30,000/- வலி மற்றும் வேதனைக்காக கிடைக்கத்தக்கது என்று இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.

v) மனுதாரரின் வயது, தொழில், சிகிச்சை விவரங்கள், காயத்தின் தன்மை மற்றும் ஊனச்சான்றைக் கருத்தில் கொண்டு பின்வருமாறு இழப்பீடு வழங்க நீதிமன்றம் முடிவு செய்கிறது.

| | | |
|---|---|---|
| 1. | மனுதாரரின் ஊனத்திற்காக 35 X 10,000 | ரூ. 3,50,000/– |
| 2. | மனுதாரரின் வருமான இழப்பிற்காக 5 x 15,000 | ரூ. 75,000/– |
| 3. | மனுதாரரின் ஊட்டச்சத்து உணவிற்காக | ரூ. 10,000/– |
| 4. | மனுதாரலின் வலி மற்றும் வேதனைக்காக | ரூ. 30,000/– |
| 5. | மனுதாரரின் ஆடை அணிகலனுக்காக | ரூ. 5,000/– |
| 5. | மனுதாரரின் போக்குவரத்து செலவிற்காக | ரூ. 5,000/– |
| | **மொத்தம்** | ரூ. 4,75,000/– |
| | கழித்தல் 10 சதவீதம் | ரூ. 47,500/– |
| | மொத்தம் | ரூ. 4,27,500/– |
| | மருத்துவபில்கள் | ரூ. 2,09,078/– |
| | மொத்தம் | ரூ. 6,36,578/– |

viii) மனுதாரருக்கு ரூ. 6,36,578/– ( ரூபாய் ஆறு லட்சத்து முப்பத்து ஆறு ஆயிரத்து ஐநூற்று எழுபத்து எட்டு மட்டும்) ஆண்டு ஒன்றுக்கு மனுதாக்கல் செய்த தேதியான 10.09.2025 லிருந்து தொகை செலுத்தும் வரை 7.5 % வட்டியுடன் மற்றும் மனு செலவுத்தொகையும் இழப்பிடாக பெறத்தக்கவர் ஆவார். மனுதாரர் மேலே குறிப்பிடப்பட்டுள்ள தலைப்புகள் தவிர வேறு தலைப்புகளின் கீழ் இழப்பீடு பெற தக்கவர் அல்ல என இத்தீர்ப்பாயம் முடிவு செய்து இப்பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

**முடிவாக மனுதாரரின் மனு பகுதியாக அனுமதிக்கப்பட்டு,**

1. மனுதாரருக்கு இழப்பீடாக ரூ. 6,36,578/– ( ரூபாய் ஆறு லட்சத்து முப்பத்து ஆறு ஆயிரத்து ஐநூற்று எழுபத்து எட்டு மட்டும்) 2 வது எதிர்மனுதாரர் செலுத்தவேண்டும் என்றும்,

2. மேற்படி இழப்பீட்டுத்தொகைக்கு மனு தாக்கல் செய்த 10.09.2025 தேதியிலிருந்து தொகை செலுத்தும் காலம் வரையிலும் ஆண்டு ஒன்றுக்கு 7.5 % வட்டி சேர்த்து விகிதாசார செலவு தொகையுடன் 2 வது எதிர்மனுதாரர் செலத்த வேண்டும் என்றும்,

3. மேற்படி மனு இடையில் தள்ளுபடி செய்யப்பட்டிருப்பின் அந்தக் காலங்களுக்கு மனுதாரருக்கு வட்டி கிடைக்கத்தக்கதல்ல என்றும்,

4. மேற்படி இழப்பீட்டுத் தொகையினை இவ்வுத்தரவு நாளிலிருந்து 2 மாத காலத்திற்குள் 2 வது எதிர்மனுதாரர் இந்நீதிமன்ற வங்கி கணக்கான SBI, Denkanikottai, Account No. 42776933113 and IFSC Code 9BIN0011058 க்கோ அல்லது மனுதாரர் வங்கி கணக்கிற்கோ E Transfer மூலம் செலுத்தி வைத்து அதுகுறித்து குறிப்பு மற்றும் பேங்க் அட்வைசுடன் கடிதம் மூலம் தீர்ப்பாயத்திற்கும் அதன் மற்றொரு நகலை மனுதாரர் அல்லது அவரது வழக்கறிகருக்கும் அனுப்ப வேண்டும் என்றும்,

5. மனுதாரருக்காக வைப்பீடு செய்யப்பட்ட தொகை மற்றும் அதற்குரிய வட்டித்தொகை மனுதாரரின் வங்கி கணக்கில் நேரடியாக NEFT or RTGS மூலம் பெற்றுக்கொள்ளலாம் என்றும்,

6. வழக்கறிஞர் ஊதியம் ரூ. 13,366/- அவரது வங்கி கணக்கிற்கு E Transfer மூலம் செலுத்தி வைக்கப்படும் என்றும்,

7. மேற்படி நஷ்ட ஈட்டுக்குரிய நீதிமன்றக் கட்டணம் ரூ.5,738/- ஏற்கனவே செலுத்திய நீ.ம.க. ரூ.372.50/- போக எஞ்சியுள்ள நீ.ம.க.ரூ. 5,366/- ஐ இவ்வுத்தரவு பிறப்பிக்கப்பட்ட 30 தினங்களுக்குள் மனுதாரர் செலுத்த வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது.

8. 2020(4) CTC 272, Cholamandalam Ms Genl. Ins. Co. Ltd. Vs Mr. Ayyannar S என்ற மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற உத்தரவின்படி தீர்ப்பாணை தயாரிக்கப்படவில்லை.

**<u>மனுதாரர் தரப்பு செலவுத்தொகை பட்டியல்</u>**

| | |
|---|---|
| நீதிமன்ற கட்டணம் | ரூ. 372.50/- |
| வக்காலத்து நாமா ஸ்டாம்பு | ரூ.10/- |

| | |
|---|---|
| புரோசஸ் கட்டணம் | ரூ.10/- |
| தஸ்தாவேசுகளுக்கு ஸ்டாம்பு | ரூ.25/- |
| வழக்கறிஞர் கட்டணம் | ரூ. 13,366 /- |
| பாக்கி செலுத்த வேண்டிய நீதிமன்ற கட்டணம் | ரூ. 5,366/- |
| தட்டச்சு கட்டணம் | ரூ. 100/- |
| மொத்தம் | ரூ. 19,250 /- |

9. 2 வது எதிர்மனுதாரர் மனுதாரருக்கு ரூ. 19,250 /- செலவுத்தொகையை செலுத்த வேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது.

இவ்வுத்தரவு என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2026-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 02-ஆம் தேதியன்று அவையறியப் பகரப்பட்டது.

S VIJAY ALAGIRI

Sub Judge
Digitally signed by S VIJAY ALAGIRI
Location: Denkanikottai
Date: 2026.04.02 17:04:57 +0530

**<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள்:</u>**

| | |
|---|---|
| ம.சா.1 | வெங்கடேஷ் |

**<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:</u>**

| | |
|---|---|
| ம.சா.ஆ.1 | முதல் தகவல் அறிக்கை கார்பன் நகல் |
| ம.சா.ஆ.2 | அரசு மருத்துவமனை தேன்கனிக்கோட்டை AR காப்பி நகல் |
| ம.சா.ஆ.3 | குணம் மருத்துவமனையின் விடுவிப்பு சான்று அசல் |
| ம.சா.ஆ.4 | TN 34 AH 8656 வாகனத்தின் பதிவு சான்றிதழ் |
| ம.சா.ஆ.5 | TN 34 AH 8656 வாகனத்தின் காப்பீடு பாலிசி நகல் |
| ம.சா.ஆ.6 | TN 34 AH 8656 வாகனத்தின் ஓட்டுநர் உரிமம் நகல் |

| | |
|---|---|
| ம.சா.ஆ.7 | TN 70 AT 6384 என்ற வாகனத்தின் பதிவு சான்றிதழ் நகல் |
| ம.சா.ஆ.8 | TN 70 AT 6384 என்ற வாகனத்தின் காப்பீடு பாலிசி நகல் |
| ம.சா.ஆ.9 | மனுதாரரின் ஆதார் அட்டை அசலுடன் சரிபார்க்கப்பட்டது நகல் |
| ம.சா.ஆ.10 | மருத்துவமனை பில்கள் ரூ.2,09,078/- அசல் |
| ம.சா.ஆ.11 | மனுதாரரின் வங்கி கணக்கு புத்தகம் அசலுடன் சரிபார்க்கப்பட்டது |
| ம.சா.ஆ.12 | மனுதாரரின் PAN அட்டை |
| ம.சா.ஆ.13 | TN 34 AH 8656 வாகன ஆய்வாளர் அறிக்கை நகல் |
| ம.சா.ஆ.14 | TN 70 AT 6384 வாகன ஆய்வாளர் அறிக்கை நகல் |

**<u>நீதிமன்ற சான்றாவணங்கள்</u>**

| | |
|---|---|
| நீ.ம.சா.ஆ.1 | மனுதாரருக்கு வழங்கப்பட்ட ஊனச்சான்றிதழ் அசல் |

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள்</u>**

| | |
|---|---|
| எ.ம.சா.1 | பரமேஷ்வரன் |

**<u>சாட்சி சான்றாவணங்கள் :</u>**

| | |
|---|---|
| சா. சா.ஆ.1 | அனுமதி கடிதம் |

Sub Judge

S VIJAY ALAGIRI

Digitally signed by S VIJAY ALAGIRI
Location: Denkanikottai
Date: 2026.04.02 17:05:02 +0530